
முரசொலி பாசறை மதுரை 19.06.2026

## திராவிடத்தால் வாழ்கிறோம்

1233

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

115

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."




# தி.மு.க.வை காங்கிரஸ் விமர்சிப்பது வெட்கக்கேடு!

**‘இந்தியா கூட்டணி’ ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்காததால் தி.மு.க. தனித்துவிடப்பட்டதுபோல காங்கிரஸ் கட்சி தரப்பில் விமர்சிக்கிறார்களே?**

சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் செய்த துரோகத்தை உணர்வுள்ள தி.மு.கழகத் தொண்டர்களில் ஒருவர்கூட ஏற்றுக்கொள்ள மாட்டார். ஏன், தி.மு.க. கூட்டணியில் ஓட்டு வாங்கி, 5 தொகுதிகளை வென்ற காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்த பொதுமக்களேகூட காங்கிரஸ் கட்சியின் நன்றிகெட்டதனத்தை மன்னிக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில், ‘காங்கிரஸ் தலைமையில் நடைபெறும் ‘இந்தியா கூட்டணி ’ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை’ என்பதை உறுதியாகத் தெரிவித்தது தி.மு.க. தலைமை. அதே நேரத்தில், ‘இந்தியாவின் மதச்சார்பின்மைக் கொள்கை சார்ந்து அந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஒத்துழைக்கும்’ என்றும் தெளிவாகவே அறிவித்திருந்தது.

தி.மு.க. பங்கேற்காததால், அது தனிமைப்பட்டு விடவில்லை. மாறாக, தி.மு.க. பங்கேற்காததன் காரணத்தை உணர்ந்து, அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், ராஷ்ட்ரிய ஜனதாதளக் கட்சியின் தேஜஸ்வி, தேசியவாத காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்கள். அந்த ஆலோசனைக் கூட்டத்திலேயே தங்கள் மாநிலங்களான உத்தரப் பிரதேசம், பீகார், மகாராஷ்டிராவில் காங்கிரஸ் செய்த குழப்பங்களையும் அடாவடித் தனங்களையும் எடுத்துச்சொல்லி, ராகுல் காந்தியின் முகம் வெளிறிப்போகிற அளவுக்கு குற்றச்சாட்டுகளை வைத்திருக்கிறார்கள். தி.மு.கழகம் நாகரிகம் பார்த்துப் புறக்கணித்தது. மற்ற கட்சிகள் முகத்துக்கு நேராகவே வெளுத்து வாங்கியிருக்கின்றன. இவை போதாதென்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் எம்.பி. ஜான் பிரிட்டாஸ் கேரளாவில், பா.ஜ.க. எதிர்ப்பில் காங்கிரஸ் போட்ட இரட்டை வேடத்தைத் தோலுரித்துக் காட்டி யிருக்கிறார். இந்தியா கூட்டணிக் கூட்டத்தில் பங்கேற்காத ‘ஆம் ஆத்மி’ கட்சியும் காங்கிரஸின் நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்துள்ளது. இதுதான் உண்மை நிலை.

சொந்தமாக வெற்றிபெற காங்கிரஸுக்கு இந்தியாவில் ஒரு மாநிலம்கூட இல்லை என்ற நிலைமை ஏறத்தாழ உருவாகிவிட்டது. இந்த இலட்சணத்தில், தமிழ்நாடு அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள காங்கிரஸ் அமைச்சர்கள், தி.மு.க.வை விமர்சிப்பது வெட்கக்கேடு. ‘சுதந்திரா கட்சி’, ‘தமிழ் மாநில காங்கிரஸ்’ போன்ற காங்கிரஸிலிருந்து பிரிந்த கட்சிகளுடன் கூட்டணி வைத்துதான் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது என்றும் ‘முரசொலி’யில் காங்கிரஸ் பற்றி எழுதினால், நாங்களும் விமர்சித்து எழுதுவோம் என்றும் சவடால் விட்டிருக்கிறார்கள். ராஜாஜியின் சுதந்திரா கட்சி மட்டுமல்ல, பெரியாரின் சுயமரியாதை இயக்கமுமே காங்கிரஸிலிருந்து வெளியேறி உருவான இயக்கம்தான். காங்கிரஸின் யோக்கியதையை முதலில் அம்பலப்படுத்தியவர் பெரியார். அதன்பிறகு, ஒவ்வொரு காலத்திலும் ராஜாஜி, ஜி.கே.மூப்பனார் உள்ளிட்ட பலரும் அம்பலப்படுத்தி இருக்கிறார்கள். இதற்கு காங்கிரஸ் வருந்தவேண்டுமே தவிர, பெருமை பீற்றிக்கொள்ள எதுவுமில்லை. முரசொலிக்குப் பதிலளித்து விமர்சிப்பார்களாம்? அதற்காவது காங்கிரஸிடம் சொந்தமாக – உருப்படியாக ஓர் ஊடகமாவது இருக்கிறதா?

...வினா தொடரும்.

## தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும்!

‘நீட் தேர்வில்’, நாடு முழுவதும் பல்வேறு முறைகேடுகள் மற்றும் வினாத்தாள் கசிவுப் புகார்கள் எழுந்து, தேசியத் தேர்வு முகமையின் நடவடிக்கைகள் கடுமையான விவாதங்களுக்கும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளாகியுள்ளன. குறிப்பாக, மே 3, 2026 அன்று நடைபெற்ற ‘நீட் (UG) தேர்வின்’ வினாத்தாள் முன்கூட்டியே கசிந்ததாகப் புகார்கள் எழுந்தன. இந்த வினாத்தாள் கசிவு விவகாரத்தை அடுத்து, தேசியத் தேர்வு முகமை ‘நீட் தேர்வை’ ரத்து செய்தது. இந்த திடீர் ரத்தால் நாடு முழுவதிலும் உள்ள சுமார் 23 இலட்சம் மாணவர்கள் கடுமையான மன உளைச்சலுக்கும் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளனர்.

ரத்து செய்யப்பட்ட தேர்வுக்குப் பின் அறிவிக்கப்பட்ட மறுதேர்வுக்கான வினாத்தாள்களைத் தருவதாகக் கூறி, ‘டெலிகிராம் செயலி’யில் ரூ.14,000 முதல் ரூ.25,000 வரை பண மோசடி செய்த கும்பல்களைப் போலீஸார் கைதுசெய்துள்ளனர். ‘நீட் தேர்வு’க்கான விண்ணப்பக் கட்டணத்தை மாணவர்களுக்குத் திரும்பத் தரும் தேசியத் தேர்வு முகமையின் இணையப் பக்கத்தில் ஊடுருவி, சுமார் 150 மாணவர்களின் பணத்தைத் தனது கணக்கிற்கு மாற்றிய பீகாரைச் சேர்ந்த 19 வயது மாணவர் சைபர் கிரைம் போலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுபோன்ற குளறுபடிகளுக்குப் பொறுப்பேற்று, ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டுமென்று கோரிக்கை வலுத்துவருகிறது.

‘காக்ரோச் ஜனதா பார்ட்டி’ சார்பில் இக்கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ள சூழலில், தமிழ்நாட்டிலும் இக்கோரிக்கை எழுந்துள்ளது. நீட் தேர்வில் நடந்த ஊழல்களுக்குப் பொறுப்பேற்று, தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டுமென்று, ‘அகில இந்திய மக்கள் இயக்கம் – தமிழ்நாடு’ ஆர்ப்பாட்டம் அறிவித்துள்ளது. நாளை (20.06.2026) காலை 10 மணிக்கு எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகில், இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



க.அன்பழகன்



### தளபதி அவர்களுடன் சிறுவனாக...

1994-ஆம் ஆண்டு ஜூலை 21-ஆம் தேதி, திருச்சி திருவரங்கத்தில், திருச்சி – கரூர் – அரியலூர் மாவட்ட இளைஞர் அணிச் செயல்வீரர்கள் கூட்டம், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. எனது தந்தையார் கந்தசாமி அவர்கள், திருவரங்கம் கிளைக் கழகச் செயலாளராக இருந்ததுடன், கூட்டம் நடைபெற்ற மண்டபம் அருகிலேயே சைக்கிள் கடை வைத்திருந்தார். அப்போது, இளைஞர் அணியில் சேரும் வயதில்லை என்றாலும், தளபதி அவர்களின் பேச்சைக் கேட்பதற்காக, சிறுவனாக இருந்த நானும் சென்றிருந்தேன். 30 ஆண்டுகளைக் கடந்தும், அன்றைக்கு இருந்த அதே பற்றுடன் கழகப் பணியாற்றுவதில் மகிழ்கிறேன்.

**– க.அன்பழகன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், திருச்சி மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம்ம வரலாறு / நம் வீடுகள்


### இப்பதவி இனிப்பானதல்ல!

12.07.1968 அன்று கரூரில், தந்தை பெரியாரின் 89-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் உரையாற்றி னார் பேரறிஞர் அண்ணா.“என்னுடைய நண்பர்கள் எல்லாம், நான் பிரிந்து சென்றுவிட்டேன் என்று குறிப்பிட்டார்கள். இருக்கவேண்டிய கடினமான நாட்களில் இருந்தேன். பிரிந்தேன் என்பதுகூட தவறு. இந்த நாடு அரசியலை நமக்கு நேர்மாறான கருத்துடையவர்களிடம் கொடுத்துவிட்டு, அவர்களுக்கு நாம் ஆளாகி இருப்பதைப் போக்க வேண்டும் என்பதற்காக, அரசியலில் நுழைந்து அதனைக் கைப்பற்றியும் இருக்கிறேன். இவரது கொள்கைகளை நிறைவேற்ற, என்னால் இயன்றவரை பாடுபடுவேன். இந்த ஆட்சியால் பயனில்லை, எதுவும் செய்ய இயலாது என்றால், ஒட்டிக்கொண்டிருப்பேன் என்று யாரும் கருத வேண்டாம். எனக்கு இப்பதவி இனிப்பானதல்ல” என்று முழங்கினார்.

## மாற்றம் ⇆ ஏமாற்றம்!

## கேள்விக்குறியாகும் பெண்கள் பாதுகாப்பு!




நன்றி: **ஓவியர் முகிலன்.**

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900